//மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள்

சென்னை - 600 006

ப.மு. எண். 50109 / அ4 / இ3 / 2021, நாள். 07.12.2021.

"""""

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் - (Group-II A Services) (Non - Interview posts) -2013-2014ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது - சார்பு.

பார்வை:

1. அரசாணை (4டி) எண். 18, பள்ளிக் கல்வித் [ப.க. 4(2)] துறை, நாள். 28.10.2013.
2. அரசாணை (4டி) எண். 353, பள்ளிக் கல்வித் [ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண். 34, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பி) துறை, நாள். 15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, கடிதம் ந.க. எண். 1789/PSD-G/2015, நாள். 27.02.2015 மற்றும் 29.10.2015.
5. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண். 9825/அ4/இ3/2013, நாள். 21.03.2015 மற்றும் 19.12.2015.
6. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

====

2013-2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group-II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பார்வை (4)ல் கண்ட கடிதம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை 12-ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்காணும் பணியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்யக் கோரிப் பார்வை (6)ன் வாயிலாக உரிய கருத்துருக்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன் வரப்பெற்றுள்ளன.

(த.பி.பா.)

அதனடிப்படையில் கீழ்க்காணும் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் தமிழ்நாடு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் ) சட்டம் 2016–ன்கீழ் உட்பிரிவு 28–ன்கீழ் பணிவரன்முறை செய்து நியமன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி (திரு. / திருமதி / செல்வி) | பணிபுரியும்அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைப்படுத்தும் நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | மு. அருண்குமார்,<br>உதவியாளர். | வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>காரிமங்கலம், தருமபுரி மாவட்டம். | 23.03.2015<br>முற்பகல் |
| 2. | எஸ். கீதா,<br>உதவியாளர். | வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>திருவாரூர், திருவாரூர் மாவட்டம். | 21.12.2015<br>முற்பகல் |

மேற்படி (02) பணியாளர்கள் சார்பாக கல்வித் தகுதிச் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையிலுள்ள 2013–14 Group II A Services–ன்கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிப்பதுடன், தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர் : சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).

நகல் : சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.

நகல் : சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர். முதன்மைக்கல்வி அலுவலகம், திருவாரூர்

ந.க. எண். 7458/ அ1/ 2021
நாள் 06.01.2022
(நகல்) தொடர்புடையவருக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்: எஸ்.கீதா, உதவியாளர், வட்டாரக்கல்வி அலுவலகம், திருவாரூர் (உரிய அலுவலர் வழியாக)
நகல். 1. வட்டாரக்கல்வி அலுவலர், திருவாரூர்
2. மாவட்டக்கல்வி அலுவலர், திருவாரூர்

06/01/2022
முதன்மைக் கல்வி அலுவலர்
திருவாரூர்-610 004.
06/01/2022